Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

## SESSIONS CASE NO.23/2021

Deposition of PW11 Witness for Defence

Defence Court

Name :S.Karunakaran Caste:

Father's Name :Subbareddy Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03rd day of August 2023.

**(A1 and A2 are absent and Petitions filed U/s.317 Cr.P.C is allowed. A3 to A5 are present )**

**முதல் விசாரணை-**

நான் சென்னை திருவேற்காடு பகுதியில் வசித்து வருகிறேன். நான் திருவேற்காடு கோலடி சாலையில் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன். கொலை சம்பவம் நடந்துள்ள இடம் எனது விவசாய நிலத்திற்கு அருகில் உள்ளது. அந்த இடத்தில் வேலிகாத்தான் முட்புதர் நிறைந்திருக்கும். நான் எனது அந்த இடத்தை பார்க்க செல்லும் நேரங்களில், அந்த இடத்தில் பையன்கள் விளையாடிக்கொண்டும், உட்கார்ந்து பேசிக்கொண்டும் இருப்பார்கள். இந்த விவரங்களை போலீசார் விசாரிக்கும் போது கூறினேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் கிடையாது. அந்த இடத்தில் சில நபர்கள் காலை கடன் கழிப்பார்கள். நான் தினசரி எனது இடத்திற்கு செல்லவதில்லை. எப்போதாவது செல்வேன். சம்பவ இடம் எனது இடத்திற்கு அருகில் இருப்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.